## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 74/2023 | Date : 10.07.2026 | PW 1 |
|---|---|---|
| Name: சந்திரன் | த/பெ.சின்னுசாமி | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய தொழில் வருமானம் வயது காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.12 ஆவணம் Duplicate காப்பி என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் டுப்ளிகேட் காப்பி ஒரிஜினல் submitted for Insurance Claim என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் முன்தொகையும் சேர்த்து கணக்கிட்டுள்ளதால் அந்த தொகையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றேன் நாங்கள் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பிவிட்டு மெயின்ரோட்டிற்கு வந்து ரோட்டில்ஏறியபோது அங்கு டாரஸ் மண் கொட்டிக்கொண்டிருந்தது என்றால் சரிதான். அப்போது இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் டாரஸ் லாரியில் அவர் இடித்துவிபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் தலைகவசம் அணிந்திருந்தார். நான் தலை கவசம் அணியவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் விபத்திற்கு அவர்தான் காரணம் என்றும் நஷ்டஈடு கணக்கிடும் போது அவரது அஜாக்ரதையும் கணக்கில் எடுத்துகொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றாலும் கேட்டுள்ள தொகை அதிகம் என்றாலும் சரியல்ல.

ஒம்/–சந்திரன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.